



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சியில், ஈரோடு முதல் பழனி வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கத்தினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மொடக்குறிச்சி ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சு.குணசேகரன், வ.கதிர்வேல், மொடக்குறிச்சி சரவணன், (தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம், ஈரோடு மண்டலம்) பொது மேலாளர் சிவக்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூராட்சி, வார்டு எண்.6 மூவேந்தர் நகரில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், மூலனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை தமிழரசு, பேரூராட்சி தலைவர், பேரூர் கழக செயலாளர் மக்கள் தெண்டபாணி உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின்கீழ்

# சேலத்தில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம்,செப்.8-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் மரம் நடும் நிகழ்வினை சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் நேற்று முன்தினம் (06.09.2025) தொடங்கி வைத்தார்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் வனப்பகுதியை 33 விழுக்காடு அளவிற்கு அதிகரிக்க உத்தர விட்டு, வனப்பரப்பை அதிகரிக்க தமிழ்நாடு பசுமை இயக்கம் திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். அதன்படி, தமிழகத்தில் வனப் பரப்பினை அதிகரித்திடும் வகையில் பல்வேறு பகுதிகளில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகிறது.

அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளின் மூலம் மரக்கன்றுகள் நடவு செய்யும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இன்றைய தினம் நகர்ப்புற பசுமையாக்குதல் திட்டத்தின் கீழ் சேலம், 5 ரோடு, ரிலையன்ஸ் மால் அருகில் பலவகை மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், வேப்பம், பூவின், புங்கை, நாவல், மூங்கில், தேக்கு உள்ளிட்ட 150 க்கும் மேற்பட்ட மரங்கள் சேலம் மாநகராட்சியின் பொது இடம் வகைப்பாட்டில் உள்ள 18,250 சதுர அடி நிலப்பரப்பில் நடப்பட்டுள்ளது. அதேபோன்று, பொது மக்களும் தங்கள் வீடுகளைச் சுற்றியுள்ள காலியிடங்களில் மரக்கன்றுகள் நடவு செய்து பராமரித்து, தமிழ்நாட்டை பசுமை மாநிலமாக மாற்றிட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, மாநகர பொறியாளர் செல்வநாயகம், உதவி ஆணையர் திருமதி லட்சுமி, செயற் பொறியாளர்கள் பழனிசாமி, திருமதி திலகா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தமிழகம் முன்னேறி இருப்பதற்கு அடிப்படை காரணம் கல்வியே!

# அறிவுசார்ந்த சமூகத்தை உருவாக்கும் சிற்பிகள்தான் ஆசிரியர்கள்!

## அமைச்சர் சா.சி. சிவசங்கர் பெருமிதம்!

அரியலூர்,செப்,8

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் பன்னாட்டு லயன் சங்கம் சார்பில் சிறப்பாக பணியாற்றிய அரசு மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அறிவுச் சுடர் விருது வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் தமிழ்நாடு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்

இதில் கரூர் முதல் காரைக்கால் வரை லயன்ஸ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு லயன் சங்கமும் அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் சிறப்பாக பணிபுரியும் ஆசிரியர்களை தேர்வு செய்து ஒரு சங்கத்திற்கு ஒரு ஆசிரியர் என 286 சங்கத்தில் இருந்து 286 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுச் சுடர் விருது வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

அறிவுசார்ந்த சமூகத்தை உருவாக்கும் சிற்பிகளாக ஆசிரியர்களைப் போற்றும் 'அறிவுச் சுடர்' நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதில் முதலில் உங்களுக்கு நன்றி தெரிவித்து மகிச்சியடைகிறேன்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் பன்னாடு லயன்ஸ் சங்கங்கள் ஏற்பாடு செய்திருந்த இந்த மாவட்ட ஆசிரியர் தின விழாவில்,சிறந்த ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்ததில் மிகவும் பெருமகிழ்சி அடைகிறேன்.

மாணவர்களின் வாழ்க்கையில் ஆசிரியர்களின் பங்கு மிக முக்கியமானது பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆசிரியர் பணி என்பது சவாலானதும் கூட ஆசிரியர்கள் சிறப்பாக பணியாற்றி சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு அறிவு சுடர் வழங்குவது பொருத்தமானதாக இருக்கும்.

உயர்கல்வி பெறுபவர்கள் என்ற மத்திய அரசின் இலக்கை விட திராவிட மாடல் அரசின் முயற்சியால் இரண்டு மடங்கு தமிழகத்தில் உயர் கல்வி பயின்று வருகின்றனர் ஆனால் வட மாநிலங்களில் உயர் கல்வி பெறுபவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருப்பதாக மத்திய அரசின் புள்ளி விபரம் தெரிவிக்கிறது தமிழ்நாட்டில் இடை நின்ற மாணவர்களை கண்டறிந்து அவர்கள் உயர்கல்வி பெற ஊக்குவித்து வருகிறது திராவிட மாடல் அரசு வட மாநிலங்கள் பின் தங்கி இருப்பதற்கும் தமிழகம் வளர்ச்சி அடைந்து இருப்பதற்கும் முக்கிய அடிப்படை காரணமாக இருப்பது கல்வியே உள்ளது இவ்வகையான கல்வியை போதிக்கும் ஆசிரியர்களின் பணி பாராட்டுக்குரியது போற்றுதலுக்குரியது என பேசினார்.

நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் லயன் சங்க மாவட்டத் தலைவர் பி.ரமேஷ்குமார், மாவட்ட ஆளுநர் மணிவண்ணன், மாவட்ட லயன்ஸ் சங்க நிர்வாக அலுவலர் கே.ராஜன்,

இதில் சாசன தலைவர், லயன் சங்க ஒருங்கிணைப்பு குழு மாவட்ட தலைவர்கள், செயலாண்மை குழு மாவட்ட தலைவர்கள், ஜெயங்கொண்டம் சிறைத்துறை அலுவல் சாரா பார்வையாளர் ஆர்.கே.செல்வமணி, பரப்பிரம்மம் முத்துக்குமார் மற்றும் ஜெயங்கொண்டம் சோழன் சிட்டி லயன் சங்க நிர்வாகிகள், ஆசிரியர்கள், பொதுமக்கள், அரசியல் பிரமுகர்கள், பல்வேறு அமைப்பு சார்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். முடிவில் செயலாண்மைக் குழு செயலாளர் டி.என்.முருகானந்தம் நன்றி கூறினார்.





அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் பன்னாட்டு லயன்ஸ் சங்கங்கள் ஏற்பாட்டில் கரூர் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள மாவட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு அறிவுசார்ந்த சமூகத்தை உருவாக்கும் சிற்பிகளான ஆசிரியர்களைப் போற்றும் 'அறிவுச் சுடர்' விருதுகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கிச் சிறப்பித்தார். உடன் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன். லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் பி.ரமேஷ்குமார், மாவட்ட ஆளுனர் மணிவண்ணன், மாவட்ட லயன்ஸ் சங்க நிர்வாக அலுவலர் கே.ராஜன், ஆர்.கே. செல்வமணி, முத்து குமார், செயலாண்மைக்குழு செயலாளர் டி. என்.முருகானந்தம் மற்றும் பன்னாட்டு லயன்ஸ்சங்க நிர்வாகிகள், ஆசிரியர்கள் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு செப்டம்பர் 14 அன்று - கோவை

# மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் "சுற்றுப்புறச்சூழல், இரத்ததானம் விழிப்புணர்வு "மாரத்தான்!

## மேற்கு மண்டலப் பொறுப்பாளர் வி.செந்தில் பாலாஜி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!

கோவை, செப். 8-

கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு செப்டம்பர் 14 அன்று கோவை மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில் "சுற்றுப்புறச் சூழல், இரத்ததானம் விழிப்புணர்வு "மாரத்தான்" போட்டியை கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார் என்று கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அறிக்கை வருமாறு :

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வருகின்ற 14.09.2025, ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 6.00 மணியளவில் பீளமேடு மசக்காளிப்பளையம் சாலை பாலன் நகர் வளைவு அருகில் தி.மு.கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு "சுற்றுப்புறச் சூழல், இரத்ததானம் விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடைபெற உள்ளது. இப்போட்டியை கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.



மாரத்தான் போட்டி பள்ளி மாணவர்களுக்கு 6 கி.மீ. தூரமும், பள்ளி மாணவிகளுக்கு 4 கி.மீ. தூரமும், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு 10 கி.மீ. தூரமும், கல்லூரி மாணவிகள் மற்றும் பொதுமக்களுக்கு 6 கி.மீ. தூரமும், 44 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்கு 6 கி.மீ. தூரம் என 5 பிரிவுகளில் நடைபெற உள்ளது. போட்டியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் டீ சர்ட், பதக்கங்கள், சான்றிதழ்கள், மற்றும் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத் தொகையும் வழங்கப்பட உள்ளது.

அதுசமயம், இந்த மாரத்தான் ஓட்டப்பந்தயப் போட்டி தொடக்க நிகழ்ச்சியில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள், கழகத் தொண்டர்கள், (BLA2) பாகமுகவர்கள், (BLC) பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் (BDA) உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு : போட்டியில் கலந்து கொள்ள பதிவு செய்தவர்கள் டீ சர்ட் மற்றும் BIB நம்பர்களை 13.09.2025 சனிக்கிழமை அன்று பாலன் நகர் வளைவு, கண்டியப்பன் திருமண மண்டபத்தில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணிக்குள் பெற்று கொள்ளவும் என்று தனது அறிக்கையில் அவர் தெரிவித்துள்ளார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அரசர்குளம் கிராமத்தில் முதல்வரின் கிராமச் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.80.40 லட்சம் மதிப்பீட்டில் எட்டியத்தனி அரசர்குளம் சாலை முதல் நாட்டுமங்கலம் வழி கொன்னக்காடு வரை புதிதாக அமைக்கப்படவுள்ள சாலைப் பணிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அடிக்கல் நாட்டினார்.



நாமக்கல் மேற்கு மாவட்டம், குமாரபாளையம் வடக்கு மற்றும் தெற்கு நகர தி.மு.க. பி.எல்.ஏ.–2 மற்றும் பி.எல்.சி. ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (06.09.2025) ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் கே.கே.செல்வம் தலைமையில் நடைபெற்றது. வாக்குச்சாவடி முகவர்கள் கூட்டத்தில் மாவட்ட, நகர, கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை கஅன்பழகன் எம்.எல்.ஏ. கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரை யாற்றினார். உடன் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், மாவட்டக் கழக நிர்வாகிகள் க.நசீர்முகமது, கோவி.அய்யாராசு, எஸ். துரைமுருகன், ஜெயலெட்சுமி, ஜெ.நடராஜன் உள்ளிட்ட மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள் உள்ளனர்.